# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
## சட்ட பீடம்
## சட்டமாணித் தேர்வு, ஆண்டு II – 2022

## அரசியலமைப்புச் சட்டம் II

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை : 06

**முதலாம் வினா (01)** உட்பட எவையேனும் **மூன்று (03)** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

01. **(அ) மற்றும் (ஆ) ஆகிய இரண்டிற்கும்** விடை தருக.

**(அ)** மாயா அரசின் நகர சபைச் சட்டமானது உணவகங்கள், விடுதிகள், கடைகள் மற்றும் சந்தைகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் உணவுகளை தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பாக 'ஒழுங்குபடுத்த, பரிசோதிக்க, மற்றும் கட்டுப்படுத்த' மாநகர சபைகளுக்கு அனுமதியளிக்கின்றது. மாயா அரசிலிருக்கும் ரன்முத்து நகர சபையினால் உருவாக்கப்பட்டதோர் உப சட்டவிதியானது, 'உணவை கையாளும் நபர்கள் மாயா அரசின் மருத்துவ சபையுடன் பதிவு செய்த மருத்துவ அதிகாரி ஒருவரினால் சான்றளிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான நபர்கள் உயர் தரத்திலான தனியாள் தூய்மையினை பேணுதல் வேண்டுமென்பதுடன் எல்லா நேரங்களிலும் ஒரு அங்குலத்திற்கு குறைவாக அவர்களின் தலைமுடியினை வெட்டியிருத்தல் வேண்டும்.' என்று ஏற்பாடு செய்கிறது.

அலுவலகம் ஒன்றுக்கு சோற்றுப் பொதிகளை வழங்கும் மாலிதி என்பவள் தேவைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் மருத்துவ அதிகாரி ஒருவரிடமிருந்து சான்றிதலொன்றை அவள் பெற்றுக்கொள்வில்லை என்பதுடன் இடுப்பு நீளத்திற்கு பின்னிய தலைமுடியினை அவள் பராமரித்தாள் போன்ற காரணங்களுக்காக இந்த உப சட்ட விதியை மீறியமை தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டாள். மாயா அரசின் சட்டமானது இலங்கையினதை ஒத்ததாகக் கருதிக் கொள்க. மாலிதிக்கு கிடைக்கக்கூடிய சட்ட நிவாரணங்கள் தொடர்பில் அவளுக்கு ஆலோசனை வழங்குக.

(50 புள்ளிகள்)

**(ஆ)** உள்ளூராட்சி அரசாங்க நிருவனங்களின் தத்துவங்களும் பணிகளும் உள்ளூராட்சி நிர்வாகத்திற்கு அதிகாரமளிப்பதிலும், உள்ளூர் சனநாயகத்தை வளமாக்குவதிலும் முக்கிய பங்கொன்றை வகிக்கின்றது. எவ்வாறாயினும், உள்ளூராட்சி அரசாங்க நிறுவனங்களின் விவகாரங்களில் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் என்பது இலங்கையின் தற்போதைய உள்ளூராட்சி அரசாங்க முறைமையின் பாரிய பலவீனமாகும்.

உள்ளூராட்சி அரசாங்கமானது 'தன்னாட்சி நிறுவனமொன்றாவதை' உறுதிப்படுத்துவதற்கான சீர்த்திருத்தங்களை விளக்குக. ஏனைய நியாயாதிக்கங்களிலிருந்து உதாரணங்களை எடுத்துக்காட்டுக. (50 புள்ளிகள்)

**02. ஒன்றில் (அ) வுக்கு அல்லது (ஆ) வுக்கு** விடை தருக.

**(அ)** 'ராசோ' என்பவர்கள், சுதந்திரம் பெற்றதிலிருந்து மரியானா அரசிற்காக சமஷ்டி முறைமையை கோருகின்ற தேசிய சிறுபான்மையினர்களின் குழுவொன்றாகும். மரியானா ஓர் குடியரசாக இருந்தபோதிலுங்கூட, பிரித்தானிய சகாப்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இறைமை மற்றும் ஒற்றையாட்சிவாதம் (*Unitarism*) போன்ற பாரம்பரிய கருத்தேற்புகளை அவ்வரசு தொடர்ச்சியாகப் பின்பற்றி வருகின்றது. 1980ஆம் ஆண்டுகளில், சமஷ்டி முறைமையொன்றிற்காக பல்வேறு முன்மொழிவுகளை ராசோ முன்வைத்தது. எவ்வாறாயினும், அப்பாரம்பரிய கருத்துக்களிலிருந்து விலகிச்செல்வதில் மரியானா அரசாங்கத்தின் தயக்க நிலைமையானது, ராசோவை அதிருப்திக்குட்படுத்தியதுடன், 'வெளியக சுய நிர்ணயத்தினை' கோர அவர்களை வழிநடத்தியது. 1995ஆம் ஆண்டுகளிலிருந்து, மரியானா அரசாங்கமானது அரசியலமைப்பு திருத்தங்களினூடாக பிராந்திய அலகுகளுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்கு முயற்சிக்கின்றது.

'உலகளாவிய அரசியலமைப்பு ஆய்வாளர்கள் சங்கத்திற்கான' சிரேஷ்ட சட்ட ஆலோசகராக உம்மைக் கருதிக்கொள்க. அரசியலமைப்புக்கான 13ஆம் திருத்தத்தினைத் தவிர, முறையே 1948-1985 மற்றும் 1994-2009 ஆண்டுகளிலிருந்து இலங்கையின் அதிகாரப் பகிர்வுக்கான முயற்சிகள் இரண்டினைத் தெரிவு செய்க. வேறுபட்ட அதிகாரப் பகிர்வு மாதிரிகளை பொருள்கோடல் செய்வதிலிருக்கும் கருத்திசைவின்மையின் காரணமாக அதிகாரப் பகிர்வு எவ்வாறு இடையூறுக்குட்படுத்தப்படலாம் என்பது தொடர்பாக மரியானா அரசாங்கத்திற்கு சட்ட அபிப்பிராயமொன்றினை வரைக. (100 புள்ளிகள்)

**(ஆ)** *In re the Thirteenth Amendment to the Constitution [1987] 2 Sri LR 312* இல் சட்டவாக்க அதிகாரத்தின் 'அதிகாரப் பகிர்ந்தளிப்பின்' மீதான வேறுபட்ட அபிப்பிராயங்கள் இலங்கையில் 'வேற்றுமையில் ஒற்றுமையினை' அடைவதற்கான மாறுபட்ட அணுகுமுறைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

மேற்சொல்லப்பட்ட தீர்ப்புச் சட்டத்தின் பெரும்பான்மை அபிப்பிராயத்தை சிறுபான்மை அபிப்பிராயத்துடன் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் மேலுள்ள கூற்றை ஆராய்க. உமது விடையை பொருத்தமான புலமைசார் கருத்துக்களினால் ஆதாரப்படுத்துக.

(100 புள்ளிகள்)

03. இன-மொழியியல் ரீதியான சிறுபான்மையினரின் அமைப்புமுறையான பாகுபாட்டிலிருந்து தோன்றுகின்ற முரண்பாடுகளுக்கு நிரந்தரமான தீர்வொன்றை அதிகாரப் பகிர்வு வழங்கலாம். எவ்வாறாயினும், அதிகாரப் பகிர்வின் வெற்றியானது, அவ்வேற்பாடுகளின் சொற்றொடர் எவ்வாறு வடிவமைக்கப்பட்டிருக்கின்றது என்பதில் தங்கியுள்ளது.

நீர் உடன்படுகின்றீரா? இருபத்தியோராம் நூற்றாண்டு காலப்பகுதியில் அவ்வாறான முரண்பாடுகளுடன் கையாளுகின்ற இரண்டு நியாயாதிக்கங்களிலிருந்து உதாரணங்களைக் காட்டி மேலுள்ள கூற்றை ஆராய்க. அதிகாரப் பகிர்வு தொடர்பான பொருத்தமான கருத்தேற்புக்கள் மற்றும் விவாதங்களுடன் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(100 புள்ளிகள்)

04. மாகாணத்திலிருக்கும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் இடம்பெயர்ந்த நபர்களுக்கு புனர்வாழ்வளித்தல் தொடர்பாக நியதிச்சட்டமொன்றினை நிறைவேற்ற மத்திய மாகாண சபை உத்தேசிக்கின்றது. முன்மொழியப்பட்ட 'சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வளித்தல் நியதிச்சட்டமானது', புனர்வாழ்வளித்தல் செயன்முறையின் பகுதியொன்றாக 'சமூக பாதுகாப்புத் திட்டம்' ஒன்றினையும் அறிமுகம் செய்ய மேலும் முயற்சிக்கின்றது. இடம்பெயர்ந்த நபர்களின் புனர்வாழ்வென்பது ஒருங்கிய விடயப்பொருளாகும் என்ற அடிப்படையில் முன்மொழியப்பட்ட நியதிச்சட்டத்திற்கு மத்திய மாகாண சபையின் ஆளுனர் அவரின் சம்மதத்தினை வழங்க மறுக்கின்றார். 1980ஆம் ஆண்டு 31ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவைகள் அமைப்பு (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்) சட்டமும், 1998ஆம் ஆண்டு 8ஆம் இலக்க இச்சட்டத்துக்கான திருத்தச்சட்டமும் அதே விடயத்துடன் கையாளுகின்றதாகவும் ஆளுனர் மேலும் ஊகிக்கின்றார். எவ்வித திருத்தங்களுமின்றி வரைவு நியதிசட்டத்தினை சம்மதத்திற்காக மீள சமர்ப்பித்தபோது, மத்திய மாகாண சபையினால் முன்மொழியப்பட்ட சமூக பாதுகாப்புத் திட்டமானது, 'மாற்றுத்திறன் தொடர்பான தேசிய கொள்கையுடன்' முரண்படுகின்றது என்பதை மேற்கோள்காட்டி ஆளுனர் மீண்டும் அவரது சம்மதத்தை வழங்க மறுக்கின்றார்.

முன்மொழியப்பட்ட 'சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வளித்தல் நியதிச்சட்டத்துடன்' தொடர்ந்து முன்செல்ல மத்திய மாகாண சபையின் முதலமைச்சர் உமது ஆலோசனையை நாடுகின்றார். முதலமைச்சருக்கு ஆலோசனை வழங்குக. உமது விடையை பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகள், தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்களுடன் ஆதாரப்படுத்துக.

(100 புள்ளிகள்)

05.'சூரி, யூரி, நூரி' ஆகிய மாநில அரசுகளைக் கொண்டிருக்கும் சமஷ்டி அரசொன்றாக 'வான்கீசா அரசு' காணப்படுகின்றது. அரசியலமைப்புக்கு திருத்தங்களை அறிமுகம் செய்ய இந்த அரசு உத்தேசிக்கின்றது. ஆரம்பத்தில், தேசிய பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு தொடர்புகள் போன்ற விடயப்பொருட்கள் மத்திய அரசிடம் வழங்கப்பட வேண்டுமென மத்திய பாராளுமன்றம் முன்மொழிந்தது. வெளிநாட்டு மூலங்களிலிருந்து வரிவிதிப்பு மற்றும் நேரடியாகக் கடன் வாங்குதல் தொடர்பான அதிகாரங்களை சூரி மாநில அரசு கோருகிறது. நூரி மாநில அரசானது முப்பது உறுப்பினர்களை மட்டும் தேர்வு செய்ய, ஏனைய இரு மாநில அரசுகளில் ஒவ்வொன்றும் ஐம்பது உறுப்பினர்களை செனட் சபைக்கு தேர்வு செய்வதை நூரி மாநில அரசு சுட்டிக்காட்டுகின்றது. யூரி மாநில அரசிற்குள் தாபிக்கப்பட்ட பிராந்தியமொன்றான ஹனா என்பதன் மக்கள், அவர்களின் வேறுபட்ட வரலாற்று, சமய, மற்றும் மொழியியல் அடையாளம் காரணமாக நான்காவது சுதந்திர மாநில அரசாக அங்கீகரிக்குமாறு கோருகின்றனர். அரசியலமைப்பின் உரிமைகள் மசோதாவிற்கு மேலதிக மனித உரிமைகளை, மனித உரிமைகள் அமைப்பொன்றானது முன்மொழிகின்றது. எவ்வாறாயினும், ஒவ்வொரு மாநில அரசிலும் அவ்வுரிமைகளுக்கு சமமான அங்கீகாரம் வழங்கப்படத் தேவையில்லையென அவர்கள் நம்புவதால் இம்முன்மொழிவை மாநில சட்டமன்றங்கள் மறுக்கின்றன.

மாநில அரசுகள், ஹனா பிராந்தியத்தின் மக்கள் மற்றும் மனித உரிமைகள் அமைப்பின் கோரிக்கைகளை, இறைமை, சுய ஆட்சி (*self-rule*) மற்றும் பகிரப்பட்ட ஆட்சி (*shared rule*) போன்ற கொள்கைகளின் பின்னணியில் கலந்துரையாடுக. உமது விடையானது அதிகாரப் பகிர்வு குறித்த ஒப்பீட்டு ஆராய்வொன்றினாலும் தீர்ப்பு சட்டத்தாலும் ஆதாரப்படுத்தப்பட வேண்டும். (100 புள்ளிகள்)

06. 2022ஆம் ஆண்டு அரச காணி அபிவிருத்தி சட்டமானது அரச காணிகளுக்கான அளிப்புப் பத்திர உடைமையாளர்கள் நிபந்தனையற்ற காணியளிப்புப் பத்திரமொன்றுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோராக காணப்படுவர் என ஏற்பாடு செய்தது. ஊடக சந்திப்பொன்றில், ஒவ்வொரு மாகாண சபைக்கும் அச்சட்டமூலத்தை ஆற்றுப்படுத்த அரசாங்கத்தின் தவறுகையை ஊவா மாகாண சபையின் முதலமைச்சர் விமர்சித்தார். சில நாட்களின் பிறகு, ஊவா மாகாண சபையின் நிர்வாகமானது அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைவாக கொண்டு நடாத்தப்பட முடியாதென்றும், ஊவா மாகாணத்தின் அனைத்து நிர்வாக பணிகளையும் பிரகடனத்தினூடாக ஏற்றுக்கொண்டதாகவும் சனாதிபதி தீர்மானித்தார். சில மாதங்களின் பிறகு, இலங்கை அரசாங்கமானது பொருளாதார நெருக்கடியொன்றினைச் சந்தித்த போது, அம்மாகாண சபையில் சேவையாற்றுகின்ற அனைத்து ஊழியர்களினதும் கொடுப்பனவுகளைக் குறைக்குமாறு ஊவா மாகாணத்தின் நிர்வாகத்திற்கு சனாதிபதி வலியுறுத்தினார். ஊவா மாகாண சபையின் நிர்வாக ஊழியர்களுடன் இணைக்கப்பட்ட ஓர் அதிகாரியான கரன் என்பவன், இம்முயற்சிக்கு எதிராக

வேலைநிறுத்தமொன்றினை ஒழுங்குப்படுத்தினான். இப்போராட்டத்தைத் தொடர்ந்து, ஒழுக்காற்று அடிப்படைகளில் கரனை சேவையிலிருந்து நீக்குமாறு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு ஊவா மாகாணத்தின் ஆளுனர் வலியுறுத்தினார். இரண்டு வாரங்களின் பின்னர், சனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் ஊவா மாகாண சபையை ஆளுனர் கலைத்தார்.

ஆளுனர் மற்றும் சனாதிபதியினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் அரசியலமைப்பு வலிதான்தன்மையை அரசியலமைப்பு ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்கங்களுடன் பிரத்தியேகமாக ஆதாரங்காட்டி மேலுள்ள சந்தர்ப்பத்தின் பின்னணியில் கலந்துரையாடுக.

(100 புள்ளிகள்)

***********